விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 22 றஜப் 18 இதழ்: 284

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-2-1991


## நிர்ணய விலை வர்த்தகரின் வியாபாரத் தந்திரம்

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள்கள், எரிபொருள்களுக்கு விலைகள் நிர்ணயிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சில வியாபாரிகள், விலை நிர்ணயிக்கப்பட்ட பொருள்களுடன் விலை குறைந்த மற்றும் சிலபொருள்களைச் சேர்த்துக் கூடிய விலைக்கு விற்பனைசெய்யும் வியாபாரத் தந்திரத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

கல்வியங்காடு சந்தையில் நேற்று முன்தினம், தற்போது விவசாயிகளிடம்விற்பனையாகாமல் இருக்கும் வெங்காயத்தை கிலோ 8-00ரூபாவீதம் வாங்கி அவற்றுடன் ஒரு சவர்க்காரத்தைச் சேர்த்து

(3ம் பக்கம் பார்க்க)

## தமிழ் போராளிகளுக்கு தற்போது விடுதலை இல்லை

[சென்னை]

தமிழகத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் போராளிகள் தற்போதைக்கு விடுதலைசெய்யப்படமாட்டார்கள் என புதுடில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு கலைக்கப்பட்

(3ம் பக்கம் பார்க்க)

★ அமெரிக்க கப்பல்களுக்கு

# எரிபொருள் வழங்குவதற்கு எதிர்க் கட்சிகள் கண்டனம்!

(கொழும்பு)

வளைகுடாவில் குண்டுத் தாக்குதல் நடத்தும் அமெரிக்க விமானங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள இலங்கை அரசின் செயலை எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

வளைகுடாவில் தாக்குதல் நடத்தும் அமெரிக்க விமானங்கள் இலங்கையில் தரித்து நின்று எரிபொருள் நிரப்பிச் செல்வதானது கண்டிக்கப்படவேண்டியதொன்று என்றும் இதற்கு தமது வன்மையான கண்டனத்தையும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்தக் கப்பல்களுக்கு இலங்கையில் எரிபொருள் வழங்கும் செயல் நாட்டில் குழப்பத்தையும் ஒற்றுமை

(4ம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில் இரு சிப்பாய்கள் பலி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் இரு இராணுவ சிப்பாய்கள் பலியானார்கள்.

நேற்றுமுன்தினம் மாவிட்டபுரம் மினிமுகாமிலிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும்

(4ம் பக்கம் பார்க்க)

## துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று நேற்று வட்டமிட்டு, பிரதியாக்கம் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வீசியது. (ஈ)

## பண மோசடி; மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்துகொண்டு பண மோசடியிலும், பாலியல் உறவுகளில் ஈடுபட்டமைக்காக, உருத்திரபுரத்தில் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கெடுபிடியினால் கொழும்பு பயணிகள் சிரமம்

(மாங்குளம்)

வவுனியாவில் இராணுவத்தினரின் கெடுபிடியினால் பயணிகள், பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வவுனியாவுக்குள் பிரவேசிப்பதற்கு இராணுவம் ஏற்படுத்திய கெடுபிடித்தடை அதிகரிப்பினால் நொச்சிமோட்டை முதல் வவுனியா வரையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## தாழையடியில் குண்டுவீச்சு மூவர்காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

தாழையடி மருதங்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் மூவர் படுகாயம் அடைந்தனர். பலவீடுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதலில் செ. அருந்தவராசா (24 வயது) வேம்படி உடுத்துறை, இ. காந்திதாஸ் (39 வயது) திருமலை, என். பொன்னையா (45வயது) ஆழிய

(4ம் பக்கப் பார்க்க)

## மறுமலர்ச்சிக் கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் நாளை செவ்வாய்க்

(4-ம் பக்கம் பார்க்க)

## தபால் சேமிப்பு கணக்கு வைப்பாளர்கள் அவதி

[உடுவில்]

தபாற்கந்தோர் தேசிய சேமிப்பு வங்கிகளில் தேசிய சேமிப்புச் சான்றிதழ்களை [நிலையான வைப்புக்கள்] வைத்திருப்பவர்கள் பலர் தமது நிலையான வைப்புக்களின் காலம் முடிவடைந்த பின்னரும் அவற்றைப் புதுப்பிப்பதற்கோ, அல்லது காசாக்கிக் கொள்ளவோ முடியாத நிலையில் அவதிப்படுகின்றார்கள்.

கடந்த யூன் மாதத்துக்குப் பின்னர் பிரதம தபாற் சந்

(4ம் பக்கம் பார்க்க)

## உணவு எடுத்துசெல்ல தடை அகதிகள் பட்டினி?

(மட்டக்களப்பு)

படுவான்கரைக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல சிறிலங்கா இராணுவம் அனுமதி மறுத்துவருகிறது.

இராணுவத்தின் இத்தடையினால் ஒன்பது அகதி முகாம்களில் உள்ள ஆயிரக்கணக்கான அகதிகள் பட்டினியை எதிர்நோக்கி உள்ளனர். (150)

## கூடுதல்விலைக்குபொருள்கள் விற்றால் நடவடிக்கை

(நல்லூர்)

"விலை நிர்ணயம் செய்த பொருட்கள் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைஎடுக்கப்படும்", என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசப் பொறுப்பாளர் கமல் மாஸ்டர் தெரிவித்தார்.

யாழ். வர்த்தகர் சங்கம் ஒழுங்குசெய்திருந்த வர்த்தகர்களுக்கான கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனை

மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap அனைத்து அழுக்கு அகற்றி வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. முழுப் போத்தல் ரூ. 90/- அரைப் போத்தல் ரூ 45/- 10க்கு மேல் விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ் நவீன சந்தை அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது - மில்க்வைற். [கி1076]

### தேவை

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திற்கு உள்வேலை, வெளிவேலை செய்யக்கூடிய இருவர் 20-க்கும் 45 வயதுக்குட்பட்டவர்கள் தேவை. காலை 9-00மணிக்கும் 12-00 மணிக்குமிடையில் தேவஸ்தான காரியாலயத்தில் சமூகம்கொடுக்கவும். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும்; கோயில் வேலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (ஏ 4311)

## இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு நேற்றுக்காலை யாழ் பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் 29 பேர் இரத்த தானம் செய்துள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு இந்நிகழ்ச்சி இடம் பெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் அநேகமானோர் இரத்தம் வழங்குவது குறைந்துவிட்டதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தில் கடமையாற்றிய 6எழுதுவினைஞர்கள் பெப்பரவரி முதல் கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (153)

# பாகிஸ்தானில்பூமி அதிர்ச்சி 300 பேர் பலி!

(கராச்சி)

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லை நகரங்களில் நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்ற பூமியதிர்ச்சியில் 300 பேர் கொல்லப்பட்டார்கள். இத்தொகை மேலும் உயரலாமென தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட கட்டிடங்கள், வீடுகள் இரு நாட்டிலும் முற்று முழுதாக தரை மட்டமாகியுள்ளது.

இதேவேளை சாதாரண பூமியதிர்வு இந்தியாவில் அஸாம் உட்பட சில மாநிலங்களில் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## கிளிநொச்சியில் நிர்ணய விலையில்பொருட்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா ஆகிய வன்னிப் பிராந்தியங்களில் உணவுப் பொருட்களுக்கும் மண்ணெண்ணை, பற்றறி, சவர்க்காரம் முதலானவற்றிற்கும்விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அத்தியாவசிய சேவைக்குழுவினர் விலைநிர்ணயம் செய்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் பிரகாரம் அரிசி கிலோ 26 ரூபா, சீனி கிலோ 32 ரூபா, மா கிலோ 28 ரூபா, சர்க்கரை கிலோ 35 ரூபா, மண்ணெண்ணை லீற்றர் 28 ரூபா, தேங்காயெண்ணை லீற்றர் 35 ரூபா, பற்றறி சோடி 50 ரூபா, தேனீர் 1 ரூபா 50 சதம், பால்தேனீர் 2 ரூபா 50 சதம், வடை 2 ரூபா 50 சதம் எனவும் விற்கப்படவேண்டும்.

மான், மரை இறைச்சி கிலோ 30 ரூபா, பன்றி கிலோ 25 ரூபா, வெள்ளை றால் 40 ரூபா, கறுப்பு றால் 60 ரூபா, நண்டு கிலோ 30 ரூபா, ஆற்று மீன் 25 ரூபா, கடல் மீன் கிலோ 40 ரூபா, தேங்காய் ஒன்று ஆகக்கூடிய விலை 10 ரூபா, சவர்க்காரம் 8 ரூபா 50 சதம், மரக்கறி கிலோ 10 ரூபா முதல் 20 ரூபாவரை விற்கப்படவேண்டும் என வன்னிப்பிராந்திய அத்தியாவசிய சேவைக் குழு அறிவுறுத்தியுள்ளது. (83)

## யாழ். ஆஸ்பத்திரியில் அலுமினிய ஊன்று கோல்கள் முடிவடைந்து விட்டன

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் ஊனமுற்ற நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுவந்த அலுமினிய ஊன்று கோல்கள் யாவும் முற்றாக முடிவடைந்துவிட்டன.

இதுவரையில் இலவசமாக ஊன்றுகோல்கள் தேவைப்பட்டவர்களில் 35 பேருக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவை வழங்கப்பட்டுவிட்டன.

மேலும் ஊனமுற்றவர்களுக்கு வழங்க ஊன்றுகோல்கள் தயாரித்து உடன் வழங்கும் நிலையில் முறிவு நெரிவு மின் ஒட்டுத் தொழிற்சாலை இல்லை. இதனாலேயே கால தாமதம் ஏற்படுகின்றது. முன்னர் ஊனமுற்ற இவ்வூன்றுகளைப் பாவித்தவர்கள் திரும்பவும் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வந்து ஒப்படைத்தால் இனி வருகின்ற நோயாளிகளுக்கு வழங்க உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். பல்கலைக்கழக பேரவையின் புதிய உறுப்பினர் 18ல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பேரவையின் நியமன உறுப்பினர்களின் அங்கத்துவம் இம் மாதம் 17ந் திகதியுடன் காலாவதியாகிறது.

இம் மாதம் 18ந் திகதி புதிய உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்படவுள்ளார்கள்.

கடந்த 3 ஆண்டுகளாக திரு. எஸ். சிவபாலசுந்தரம், திரு. ஏ. சோமசுந்தரம்பிள்ளை திரு. ஏ. ஜெகா செந்தில்நாதன், திரு. ஆர். சுந்தரலிங்கம், திரு. தேவசிகாமணி டாக்டர் என். விக்னராஜா, டாக்டர் வி. கிருஷ்ணராஜா, திரு. எஸ். ஆர். ஆசீர்வாதம் ஆகியோர் பேரவையின் நியமன அங்கத்தவர்களாக இருந்தவர்களாவர். (153)

## கீரை விதை இலவசம்

(யாழ்ப்பாணம்)

இலவசமாகக் கீரை விதை பெற விரும்புவோர் சுயவிலாசமிட்டு ஒரு ரூபா அஞ்சல் முத்திரை ஒட்டிய தபால் உறை அனுப்பி "மில்க்வைற்" ஸ்தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## மணலாற்றில் வீரமரணமடைந்த புலிகளுக்கு மக்கள் அஞ்சலி

(முல்லைத்தீவு)

மணலாற்றுப் பகுதியில் சிங்கள இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த முல்லைத்தீவு மாவட்டத்தளபதி மேஜர்சாந்தன்,கப்டன்புத்தா எஸ் ரவீரஞ்சன்,வேங்கை மதுவன் ஆகியோர்ன்புகழுடல்கள் மல்லாவி, மாங்குளம், கிளிநொச்சி புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், ஒலுமடு கரிப்பட்டமுறிப்பு, நெடுங்கேணி, முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய இடங்களில் மக்களின் அஞ்சலிக்காகவைக்கப்பட்டிருந்தது.

மேற்படி வீரவேங்கைகளின் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்போது வீதிகளின் இருமருங்கிலும்.

(3-ம் பக்கம் பார்க்க)

## இந்திய படையினால் பலியான மாணவர் குடும்பத்திற்கு ஒரு லட்ச ரூபா நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் உரிமைக்கான போராட்டத்தில் பங்குபற்றி இந்திய படையின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான யாழ். பல்கலைக்கழக மாணவர்களான க. சத்தியேந்திரா, ஜெகநாதன் ஆகியோரின் 2ம் ஆண்டு நினைவஞ்சலி நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களினால் கொடிதினத்தின் மூலமும், பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் மன்றில் நடைபெற்ற காத்தவராயன் நாடகத்தின் மூலமும் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாவை நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கே. குணசலிங்கம் மரணித்த விஞ்ஞான பிரிவு மாணவர் சி. ஜெகநாதனின் தந்தையாரிடம் கையளித்தார்

மிகுதி நிதியைக் கொண்டு ஜெகநாதனின் பெயரில் புலமைப் பரிசில் திட்டமும் வழங்கப்படவிருக்கிறது. (153)

## இராசிபலன்

04-02-1991

திங்கட்கிழமை

மேடம்:- பெரியோர் ஆசி, தொழில் மாற்றம், குடும்பத்தில் புகழ்.

இடபம்:- வாழ்க்கைச் சிக்கல், புதிய முயற்சி, பொருள் லாபம், அசதி.

மிதுனம்:- வாக்கு கலகம், அலைச்சல் தொழில் கஸ்டம், குடும்ப பிரிவு.

கடகம்:- கற்பனை மிகுதி, அநாவசிய செலவு, தொழில் லாபம், குடும்ப சுகம்.

சிங்கம்:- அந்நிய வாசம், பணியாள் தொல்லை, நரம்பு பெலவீனம், கவலை மிகுதி.

கன்னி:- புதியஸ்தானம், அதிகாரிகள் பாராட்டு தெய்வீக செலவு!

துலாம்:- தானதர்மம், தொழில் நஸ்டம், வீண் பகை பயணம்.

விருச்சிகம்:- அந்நியர் தொல்லை, வீட்டில் கவலை, சகோதரபகை,

தனுசு:- படபடப்பு, வீண் சினம், பெண்பகை காரிய தடை.

மகரம்:- பணமுடை கல்வியால் புகழ் மனைவியால் நன்மை.

கும்பம்:- விவேகமான முடிவு, அதிகாரி துன்பம், அவமதிப்பு.

மீனம்:- வாழ்க்கையில் மகிழ்ச்சி, தொழில் லாபம், பொதுப்பணி காரிய பலிதம்.

: ஜோஸ்யர்

## நிதி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகமாணவர்களின் மகாபொல புலமைப் பரிசில் பணம், மாணவர் நன்கொடை பணம் ஆகியவை கடந்த ஜனவரிமாதம் 1-ம் திகதியிலிருந்து அதிகரித்துள்ளன. முன்பு கொடுக்கப்பட்டு வந்ததைவிட இப்பொழுது 150 ரூபா கூடுதலாக வழங்க வேண்டுமெனப் பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் மார்ச் மாதக் கொடுப்பனவுடன் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய அதிகரித்த கொடுப்பனவுகளும் சேர்த்து வழங்கப்படவிருக்கின்றன. [153]

## வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரியாலை மத்தியிலுள்ள தனது வயல்வேலைகளை முடித்துக்கொண்டு நடந்து வருகையில் வாகனம் ஒன்று மோதியதில் 74 வயதான கா. மு சின்னத்துரை என்ற வயோதிபர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஈ)

# திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சனைகள்

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தாலும், சிங்கள ஊர்காவல் படையாலும், முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் தமிழ் பொதுமக்கள் தொடர்ந்தும் கடத்திச்செல்லப்பட்டு இரகசியமானமுறையில் சுட்டு அல்லது வெட்டிக் கொல்லப்படுகிறார்கள். கொல்லப்பட்ட இவர்களின் உடல்கள் மறைக்கப்பட்டுவிடும்.

கடந்த 28.12.1990 அன்று மூதூர் பிரதேசத்தின் உள்ள மேன்காமம், பணிச்சேனை, கிளிவெட்டி, ஈச்சிலம்பத்தை ஆகிய கிராமங்களின் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களான முறையே சிவாஜிநாதன், மயில்வாகனம், ஞானம், ஞானசேகரம் ஆகியோர் தத்தமது பகுதிகளுக்கு உரிய கூப்பன் முத்திரைகளுக்கான உணவுப்பொருட்களை பெறுவதற்காக அலியொழுவ உதவி அரசாங்க செயலகத்திற்கு சென்றிருந்தனர்.

இன்றுவரை மேற்கூறப்பட்ட நான்கு முகாமையாளர்களும் தங்களது கிராமங்களுக்குத் திரும்பவே இல்லை. இந்த நால்வரது உறவினர்களும் அலியொழுவ இராணுவ முகாமிற்கும் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று விசாரித்தபோது அங்கு அப்படியான ஒருவரும் வரவில்லையெனக் கூறப்பட்டுள்ளது.

இவர்களது உண்மையான நிலைமை இன்றுவரை வெளிவரவில்லை.

## வியாபாரி சுட்டுக்கொலை

இதேபோன்று கடந்த 80-12-1990 இல் அன்று பாட்டாளிபுரத்தில் நண்டு வியாபாரம் செய்துகொண்டிருந்த தர்மன் என்பவர் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

புலிகளின் ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலும் இங்கு தமிழ் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டுதமிழ் மக்கள் அடித்து காயப்படுத்தப்பட்டுள்ளதுடன் சுட்டுக் கொலைப் பட்டுமுள்ளனர். 05-01-1991 அன்று சாம்பல்தீவில் 70 வயதான வல்லிபுரம் என்பவரை இராணுவத்தினர் அடித்து துன்புறுத்தியுள்ளனர். இவருக்கு படுகாயங்கள் ஏற்பட்டு தொடர்ச்சியான மயக்க நிலையில்இருந்திருக்கின்றார்.

இதே தினத்தில் தம்பலகாமம் அகதிகள்கண்டல்காட்டிற்கு தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றபோது பத்து பேர் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

## தம்பலகாமத்தில் இருவர் கொலை

98ம் கட்டையைச் சேர்ந்த முத்துலிங்கம், மகாலிங்கம் ஆகிய இருவரும் தம்பலகாமத்தில் வைத்து இராணுவத்தால் கொலைப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் தவிர தி. புவனசேகரம் (முள்ளிப்பொத்தானை), வே. செல்வன் (முள்ளிப்பொத்தானை), மு. ரவி 98ம் கட்டை) இந்திரன் (புதுக்குடியிருப்பு) சேகர் (96ம் கட்டை) உதயன் (கந்தளாய்) ஆகியோருடன் இன்னும் இருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதே போன்றே 16-01-1991 அன்று சாம்பல்தீவில் சாமிநாதன், துரை ஆகிய இருவரையும் இராணுவம் கைது செய்து சித்திரவதை செய்துவிட்டு 22-01-1991 அன்று துரையைமட்டும் விடுதலைசெய்துள்ளனர். சாமிநாதன் என்பவருக்கு இதுவரை என்ன நடந்தது என்று தெரியாத நிலையே உள்ளது.

## வீடுகளை எரித்தனர்

23-01-1991 அன்று காலை 11 மணிக்கு மூதூர் கட்டைபறிச்சானில் இருந்து கடற்கரைச் சேனைக்கு வந்த இராணுவத்தினர் ப. அரசரத்தினம், இ. அருமைத்துரை ஆகியோரின் வீடுகளை எரித்துள்ளனர்.

24-01-1991 அன்று சாம்பல்தீவு, மாங்கனாய், அடுப்புப்பார் ஆகிய கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பத்மநாதன், லிங்கம் ஆகிய இருவர் உட்பட பல பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

25-01-1991 அன்று அன்புவழிபுரம் பகுதி இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு 22 பேர் ஆண்கள், பெண்கள் உட்பட கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு 26-01-1991 அன்று திருகோணமலை நகரம் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு பெருந்தொகையான தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஜனசக்தி கொடுப்பனவு நிறுத்தம்

இது இவ்வாறிருக்க திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ்கிராமங்களுக்கு ஜனசக்தி கொடுப்பனவு இம்மாதத் தொடக்கத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே ஜனசக்தி பெற்றுவந்த குடும்பங்களிலிருந்து ஒவ்வொருவரை சிறிலங்கா இராணுவம் தமது முகாம்களுக்கு வேலை செய்வதற்காக அழைத்துச் செல்கின்றனர். திருகோணமலைக் கோட்டை இராணுவ முகாமுக்குத் தமிழ் பொதுமக்கள் வேலை செய்வதற்கும் அழைத்துச்செல்லப்படுகிறார்கள்.

இந்தக் கோட்டைக்குள் 13-06-1990க்கு முன்பே அகதிகள் என்ற பெயரில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களப் பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனசக்திக்குரிய உணவு போன்ற கொடுப்பனவுகள் தமிழ் பொதுமக்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் இவ்வேளையில் அவர்களை வெளியிடங்களில் கூலிக்கு வேலை செய்யச் செல்ல இராணுவம் அனுமதிப்பதில்லை. தோட்டங்களை செய்வதற்கும் விடுவதில்லை இதனால் இப்பகுதித் தமிழ்மக்கள் உணவு மற்றும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

## உணவுப் பொருள் கிடைக்கவில்லை

மேலும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்குக் கடந்த வருடக் கொடுப்பனவுகள் திருகோணமலை அரசாங்க அதிபரால் வழங்கப்படாததாலேயே தற்சமயம் தமிழ்க் கிராமங்களுக்குக் கிடைத்து வந்த உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லையெனக் கூறப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்கள் சமூக, பொருளாதார அழுத்தங்களால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

இது இப்படியிருக்க கொழும்பில் இயங்கிவந்த கடற்றொழில் அமைச்சு திருகோணமலை நகரத்தில் உட்துறைமுக வீதிக்கு கடந்த 15-01-1991 அன்று மாற்றப்பட்டுள்ளது. துறைமுக நகரமாகத் திருகோணமலையில் சிங்களமீனவர்களுக்கு மேலும் வசதியும் வாய்ப்பும் அளிப்பதுடன் கரையோரப் பிரதேசங்களில் மீனவர்கள் என்ற போர்வையில் சிங்களவர்களைக் குடியேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ள சிறிலங்கா அரசுக்கு வசதியாகஇருக்கும். -'ராஜா'

## விசேட அர்ச்சனை

(யாழ்ப்பாணம்)

சனி மாற்றத்தையொட்டி வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் இம்மாதம் பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு சனி பகவானுக்கு விசேட கிரகதோஷ நிவாரண சாஸ்திர அர்ச்சனை நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் தேவஸ்தான காரியாலயத்தில் தங்களுடைய பெயர் நட்சத்திரத்தைப் பதிவுசெய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

# "வெளியார் தலையிட்டால் தோட்டக் காணியில் தொழிலாளி குடியேறலாம்"

(கொழும்பு)

தோட்டக்காணிகளில் வெளியார் அத்துமீறி குடியேறினாலோ அல்லது ஊடுருவல் செய்தாலோ தோட்டத் தொழிலாளர்களாகிய நீங்களும் குடியேறலாம்

இவ்வாறு கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பதுளை இ.தொ.கா. காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் கூறினார்.

அவர்மேலும் பேசுகையில்; தோட்டமண்ணுடன் எமது மக்கள் பரம்பரை பரம்பரையாக பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இந்நாட்டில் அனைத்துமக்களுக்கும் உள்ள உரிமை எமது மக்களுக்கும் உண்டென்றும் அதனை நிலைநாட்டிக் கொள்வதில் பின்நிற்க கூடாதென்றும் கூறினார்.

காலம் காலமாக எமதுமக்கள் தோட்டக்காடுகளில் பாடுபட்டு வந்தனர். இதனை இலகுவில் தட்டிப்பறித்துவிட நாம் இடம்கொடுக்ககூடாது.

## தரம் குறைந்த அரிசி விற்பனை இருவர் கைது

[அனுராதபுரம்]

அனுராதபுரம் மாவட்டம் ரம்பாவா கூட்டுறவு சங்கத்தின் முகாமையாளரும், ஊழியர் ஒருவரும் தரம்குறைந்த அரிசியை மக்களுக்கு வழங்கியதற்காக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## உபஅதிபர் ஓய்வுபெற்றார்

(வட்டுக்கோட்டை)

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய உபஅதிபரும் யாழ். சைவ பரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி 30 வருடகால ஆசிரிய சேவையின்பின் தமது அறுபதாவது வயதில் இளைப்பாறியுள்ளார். (139)

கிரிக்கெட்

## இலங்கை 497-9

(வெலிங்டன்)

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும், நியூஸிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நியூஸிலாந்தில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 3-வது நாள் ஆட்டத்தில் இலங்கை 9- விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 497 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா 267 ஓட்டங்களைப் பெற்று சாதனையை ஏற்படுத்தினார்.

நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 174 ஓட்டங்களையும் 2-வது இன்னிங்ஸில் விக்கெட்டுகள் நஷ்டமின்றி 90 ஓட்டங்களையும் பெற்றது (வி)

## மணலாற்றில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்களும், மாணவர்களும் நின்று அஞ்சலி செலுத்தினர்.

இறுதியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

பூதவுடல்கள் முள்ளியவளை மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (வி)

## தமிழ் போராளி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டதையடுத்து இலங்கைத் தமிழ்ப் போராளிகள் விடுதலைசெய்யப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்களா? என பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். [சி]

## நிர்ணயவிலை

(1ம் பக்க தொடர்ச்சி)

19-00 ரூபாவுக்கு விற்பனை செய்தனர்.

கொழும்புக்கு வெங்காயம் அனுப்பப்படாததால் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, வியாபாரிகள் அவற்றை மலிவாக வாங்கி, சன்லைட்டுடன் சேர்த்து விற்பனைசெய்கிறார்கள்.

இதேபோன்று கல்வியங்காடு சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரு சில்லறைக்கடை வியாபாரிகள் ஒரு சன்லைற் சவர்க்காரத்துடன் சோயாமீற் பைக்கட்டும் சேர்த்து 28 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்தனர். மற்றொரு வியாபாரி ஒரு சன்லைற் சவர்க்காரத்துடன் ஒரு கிலோ கௌபியும் சேர்த்து 45 ரூபாவிற்கு விற்பனை செய்தார்.

இப்படியான தந்திரத்தை இவ்வியாபாரிகள் மேற்கொள்வதனால் மக்கள் தட்டுப்பாடான பொருளான சன்லைற் சவர்க்காரத்திற்காக சேர்த்து விற்பனை செய்யப்படும் பொருளை வாங்க வேண்டி ஏற்படுகிறது. [ஈ]

# இரண்டு லட்சம் இலங்கையர் வருடாந்தம் வெளியேற்றம்

[கொழும்பு]

வருடாந்தம் இரண்டு லட்சம் இலங்கையர்கள் தொழில் நிமித்தம் நாட்டைவிட்டு வெளியேறி வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடத்திய மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்விதம் வெளியேறுவோரில் அரைவாசிப் பேர் வேலைக்கு ஆட்சேர்ப்பு முகவர் மூலமாகவும் இதர சட்டபூர்வமான வழிகளிலுமாக வெளியேறிவருகின்றனர். (150)

## தபால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோரில் இருந்து இவர்களுடைய வைப்புச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களுக்கு கிடைக்காதிருப்பதனாலேயே இந்நிலை தோன்றியிருப்பதாக தெரியவருகின்றது.

சில வைப்பாளர்கள், தபாற்கந்தோர்களில் நிலையான வைப்புகளுக்குரிய பணத்தொகைளுக்கு, காசுக் கட்டளைகளைப் பெற்றுத் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் மீண்டும் நிலையான வைப்பில் இட்டுள்ளார்கள். (109)

## இராணுவக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புப் பயணிகள் வீதி ஓரங்களிலும் நொச்சிமோட்டைப்பாடசாலையிலும் நீண்ட நாட்களாக பயணத்தை மேற்கொள்ளமுடியாமல் நிரம்பி வழிகின்றனர். [150]

## தாழையடியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வலை ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

மருதங்கேணி ஆஸ்பத்திரி ஊழியர் தங்கும் விடுதி, உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், வர்த்தக நிலையம் உட்படப் பொதுமக்களின் ஏழு வீடுகளும் சேதமடைந்தன. (ஈ-152)

## மறுமலர்ச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை தலா ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை வழங்கவுள்ளதாகவும் சகல பல்கலைக்கழக மாணவர்களும், தமது அடையாள அட்டையுடன் சமூகம் தரும்படி மேற்படி கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (வி)

## பணமோசடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வம் என்பவருக்கு விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த ச. தெய்வேந்திரம் என்பவர் விடுதலைப்புலிகளின் ஆதரவாளரென தன்னைக் கூறிக்கொண்டு பணமோசடிகள் செய்தமைக்காக பொதுமக்கள் முன்னிலையில் இவரின் செயல்களை அம்பலப்படுத்திய பின்பு எச்சரிக்கைசெய்து விடுதலை செய்ததாகவும் கூறப்படுகின்றது. (வி)

## மாவிட்டபுரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் இடம்பெற்றது. இம்மோதலில் இராணுவத்தினர் தரப்பில் இருவர் கொல்லப்பட்டார்கள். (வி)

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்மையையும் ஏற்படுத்தும் என்றும் இக்கட்சிகள் தெரிவித்துள்ளன. [பூ]

## கூடுதல் விலைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கமல்மாஸ்டர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'கொழும்பில் இருந்து ஒரு லொறிபொருட்களொடு யாழ்பிராந்தியத்துக்கு வந்திருந்தால், அந்த லொறியிலுள்ள பொருட்களின் பட்டியல் எங்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அந்தப் பொருட்கள் எந்தவியாபாரிக்கு கொடுக்கப்படுகிறது என்பதையும் எமக்குத் தெரிவிக்கவேண்டும். கொழும்பிலிருந்து கொண்டுவந்த பொருட்கள் யாழ். குடாநாட்டில் பரவலாக விநியோகம் செய்ய வர்த்தகர்கள் ஆவன செய்யவேண்டும்.

"சைக்கிள் வியாபாரிகள் பொருட்களை கூடுதலான விலைக்கு விற்கிறார்கள். அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (152)

# நேற்று பல இடங்களில் 'ஹெலி' தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, கிளிநொச்சி, தென்மராட்சி உட்படத் தமிழர் வாழும் பகுதிகளில் ஹெலிகொப்டரில் இருந்து கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஹெலித் தாக்குதலினால் மூன்று மினி பஸ்கள் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சியில் 155ம் கட்டை, உமையாள்புரம் ஆகிய இடங்களில் நேற்றுக் காலை தொடக்கம் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தென்மராட்சியில் உள்ள கிளாலிப் பகுதியில் நேற்றுக் காலை 6-00 மணியளவில் ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. (வி)

## தமிழக அரசு கலைக்கப்பட்டது

# ஜனநாயகத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் ஒரு செயல்

(புதுடில்லி)

தமிழக தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது ஜனநாயகத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் செயல் என்று இந்தியமுன்னாள் பிரதமர் திரு.வி.பி. சிங் தெரிவித்துள்ளார்.

திரு. வி. பி. சிங் இது பற்றி மேலும் தெரிவிக்கையில் 'ஒரு ஜனநாயகஅரசை பதவி நீக்கம் செய்த குடியரசுத் தலைவரின் செயல் தவறானதொரு நடவடிக்கையாகும் என்றும் இச்செயல் கூட்டணி ஆட்சிமுறையின் அடித்தளத்திற்குவிழுந்த அடியென்றும் அ. தி. மு. க. வும், காங்கிரஸ் கட்சிகளும் செய்த நிர்ப்பந்தத்தின் பேரில் தான் தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டதென்றும், இது போன்ற செயல்கள் மீண்டும் நடைபெறுமலிருக்க அரசியல் சாசனத்தின் 356வது ஷரத்து திருத்தப்படவேண்டுமென்றும் தெரிவித்தார்,

தமிழ்நாட்டில் மற்றைய மாநிலங்களைவிட சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிடவில்லையென்றும். நிர்ப்பந்தத்தின் பேரிலேயே தி. மு. க. அரசு கலைக்கப்பட்டிருக்கிறதென்றும் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு.ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் கூறினார். (பூ)

# உள்ளூர் திருடர் தொல்லை அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, கலைநகர், சிவன்கோவிலடி பகுதிகளில் தற்போது திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன

இப்பகுதிகளிலுள்ள தென்னைகளில் தேங்காய் பிடுங்குதல், வேலிகளில் மட்டை கழற்றுதல், வீடுகளில் பாத்திரங்கள் எடுத்தல் முதலான திருட்டுச்சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுவருகின்றன

இப்பகுதிகளில் பகல் நேரங்களில் சிறுவர், சிறுமியர்களது சங்கிலி, காப்பு, தோடு முதலான நகைகளும் திருடப்பட்டுவருகின்றன.

அண்மையில் கலைநகர் வீதியில் நின்ற சிறுவன் ஒருவனின் காப்பைக் கழற்றிச்சென்ற சம்பவம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. (139)

# ஈராக் மீண்டும் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல்

(றியாத்)

ஈராக், நேற்றுமுன்தினமிரவு மீண்டும் ஸ்கட் ஏவுகணைகள் கொண்டு இஸ்ரேலையும் சவூதி அரேபியாவையும் தாக்கியுள்ளது.

## ஏழு விமானிகள் கையளிப்பு

ஈராக்கினால் சிறைப்பிடிக்கப்பட்ட ஏழு அமெரிக்க விமானிகளையும் சிரியாவிலுள்ள அமெரிக்க தூதுவரிடம் கையளித்துள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

இதேவேளை தமது நாட்டில் வைத்து எவரும் கையளிக்கப்படவில்லையென்று சிரியா இதற்கு மறுப்புத்தெரிவித்துள்ளது.

## காணமல்போன ராணுவ வாகனங்கள்

சவூதி அரேபியாவிலுள்ள அமெரிக்க தளத்திலிருந்து ஐம்பது ஜீப்புகள். மற்றும் இராணுவ வாகனங்கள் காணமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பூ)

# மரண அறிவித்தல்

## ச. முத்துச்சாமி

நெடுந்தீவு உடையார் மகன் என்றழைக்கப்படும் செல்லப்பா சபாபதிப்பிள்ளை முத்துச்சாமி [31-01-91] சிவபதமடைந்துள்ளார். அன்னாரது சபக்கிரியை 1-02-91 ல் அனலைதீவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

[சி-4315] தகவல்: மகன் சபாபதி

## மா. குமரேசு

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் குமரேசு 3-2-91 அன்று காலமானார். அன்னார் பூமலரின் அன்புக் கணவரும் லோ. கிருஷ்ணகுமாரி [நோர்வே), ம. கலாரஞ்சினி, லிங்ககுமார் (M. L. T. அரசினர் வைத்தியசாலை, கிலாபம்), ஜீவகுமார் [நோர்வே], சுரேஸ்குமார் [மாணவன், இடைக்காடு மகாவித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (நோர்வே), மகேந்திரராஜா (B. Com) ஆகியோரின் மாமனாரும், ஜெயசுதா, அகல்யா, றுபேக்கா, தீபா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், ஆ. சுப்பிரமணியம் [உரிமையாளர், ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி) அவர்களின் மைத்துனரும், நாகமுத்து, கிருஷ்ணபிள்ளை மார்க்கண்டு, A. V. K. மாணிக்கம் (இணைப்பு உத்தியோகஸ்தர், பனை அபிவிருத்திச் சபை, கிளிநொச்சி), சிவலிங்கம், சற்குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசம்மா, இராசமலர், (விஞ்ஞான ஆசிரியை, சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி), யோகராணி, திருமதி கிருஷ்ணபிள்ளை, சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனரும்; சி. ஆசைப்பிள்ளை, ஆ. பொன்னு ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

அச்சுவேலி வடக்கு. பொ. சிவலிங்கம்.

(சி- 4316)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.